பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 02 2026 MONDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அரியவகை கனிமங்களில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களால் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

2. நாடு முழுவதும் அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

3. மத்திய பட்ஜெட், அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் உறுதியளித்துள்ளார்.

4. பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தமிழகம் – கர்நாடகா இடையேயான பிரச்சினைக்கு தீர்வுகாண நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு உச்சநீதிமன்றம், மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

5. Cappadocia சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சார்பில் Syndrela Das, Divyanshi Bhowmica உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள்

<<<<<<<>>>>>>>

அரியவகை கனிமங்களில் இருந்து தயாரிக்கப்படும் பொருட்களால் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று, மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், கார்கள், சூரியசக்தி தகடுகள், செமி கண்டெக்டர் சிப்புகளுக்கு தேவைப்படும் பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிக்க வேண்டும் என்று கூறினார்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் காந்தங்கள் உள்ளிட்ட பொருட்களை தற்போது நாம் பயன்படுத்தி வருவதாகவும், அவற்றை உள்நாட்டில் தயாரிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள பெரும்பாலான தகவல்களை நீண்டகால அடிப்படையில் நடைமுறைப் படுத்துவது வழக்கம் என்றும், 90 நிமிட நேரத்திற்குள் பட்ஜெட்டில் அனைத்தையும் தெரிவித்து விட முடியாது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>>

நாட்டில் உள்ள அனைத்து கிராமப்புற வீடுகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்க அரசு உறுதிபூண்டிருப்பதாக மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம், 16 கோடி குடும்பங்கள் பயனடைந்திருப்பதாக தெரிவித்தார்.

அந்த குடும்பங்களின் வீடுகளுக்கு சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கான இணைப்புகள் கிராமப்புற அளவில் 80 சதவீதம் என்ற நிலையை எட்டி, முன்எப்போதும் இல்லாத சாதனை படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வீடுகளுக்கு குழாய் மூலமான குடிநீர் வழங்கப்பட்டதன் மூலம், இந்தியாவில் எட்டு லட்சத்து 40 கோடி பேர் நோயிலிருந்து பாதுகாக்கப்பட்டு இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கை தெரிவித்திருப்பதையும் திரு சி ஆர் பாட்டீல் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட் இந்த நூற்றாண்டின் அடுத்த 25 ஆண்டுகளுக்கான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று மத்திய அறிவியில் மற்றும் தொழில்நுட்பத்துறை டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், உயிரி மருந்துகளுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது, உயிரி உற்பத்தித் துறையில் இந்தியாவின் நிலையை வலுவடையச் செய்வதாக இருக்கும் என்று கூறினார்.

புற்றுநோய் போன்ற குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சையை குறைந்த செலவில் மேற்கொள்ள பட்ஜெட்டில் அறிவிப்புகள் இடம்பெற்றிருப்பதாகவும், எதிர்காலத்தை நோக்கிய பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி பேசியபோது, சர்சைக்குரிய கருத்துகள் தொடர்பாக எழுந்த அமளி காரணமாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

முன்னாள் ராணுவத் தளபதி எம் எம் நரவானேவின் பதிப்பிக்கப்படாத புத்தகத்தில் இடம்பெற்றுள்ள கருத்துகளை திரு ராகுல்காந்தி கூறியதால், ஆளும் பிஜேபி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதம் குறித்த தலைப்பை மட்டும் பேசுமாறு மக்களவைத் தலைவர் திரு ஓம்.

பிர்லா வலியுறுத்திய போதிலும், அதனை ஏற்காமல், திரு ராகுல்காந்தி பேசியதால், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், பிஜேபி உறுப்பினர்களுக்கும் இடையே கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

அவை விதிகளுக்கு உட்பட்டே திரு ராகுல்காந்தி பேச வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டார்.

பிற்பகலுக்கு பின்னர், மூன்று முறை ஒத்திவைக்கப்பட்ட மக்களவையில், கூச்சல், குழப்பம் தொடர்ந்ததால் நாளை வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உண்மைத் தன்மை இல்லாத கற்பனையான தகவல்களை திரு ராகுல்காந்தி அவையில் தெரிவிப்பதாக குற்றம் சாட்டினார்.

ராணுவத்தினரை அவமதிக்கும் வகையில் திரு ராகுல்காந்தி பேசக்கூடாது என்றும் திரு ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தமிழகம் – கர்நாடகா இடையே நீண்ட காலமாக நிலுவையில் உள்ள

பிரச்சினைக்கு தீர்வுகாண நடுவர் மன்றத்தை ஏற்படுத்துமாறு மத்திய அரசுக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக அரசு தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு விக்ரம் நாத், திரு அஞ்சாரியா அடங்கிய அமர்வு, நடுவர் மன்றம் அமைப்பது தொடர்பான அறிவிக்கையை வெளியிட்டு, ஒரு மாதத்திற்குள் அதனை ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவாவை தீர்ப்பதற்கு நடுவர் மன்றம் அமைப்பதில் தாமதத்திற்கு காரணம் ஏதும் இல்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்றுள்ள தமிழக நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன், தீர்ப்பை மத்திய அரசு விரைவில் நிறைவேற்றும் என மாநில மக்கள் எதிர்பார்ப்பதாக கூறியுள்ளார்.

இந்த பிரச்சினை குறித்து மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுத்து, குடிநீர் மற்றும் வேளாண் தேவைகளுக்காக பெண்ணையாறை நம்பியுள்ள மக்களின் நலன்களை பாதுகாக்கும் என்று அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

இந்தியா செயற்கை நுண்ணறிவு தாக்கம் தொடர்பான உச்சிமாநாடு வரும் 16-ஆம் தேதி புதுதில்லியில் தொடங்க உள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக 35 ஆயிரம் பதிவுகள் வரப்பெற்றுள்ளதாக மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள இந்த  உச்சிமாநாட்டில், நூறுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து, தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடன் இந்திய நிறுவனங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொள்ள இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இந்திய விமானப்படையின் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சி இந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெறும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் நடைபெறும் விமான கண்காட்சியில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிநவீன இலகுரக துருவ் ஹெலிகாப்டர் மற்றும் Sarang ஹெலிகாப்டர் பங்குபெறும் என்று பாதுகாப்பு அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த விமான கண்காட்சி நாளை தொடங்கி, வரும் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>>

அணு ஆயுதம் தொடர்பாக நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பிரச்சினைக்கு அமெரிக்காவுடன் பேச்சு நடத்த ஈரான் ஒப்புக் கொண்டுள்ளது.

ஈரான் கடல்பகுதியில் அமெரிக்க போர் கப்பல் அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து, பதற்றம் எழுந்த நிலையில், இருதரப்பு ராஜ்ய ரீதியிலான பேச்சுவார்த்தையை தொடங்க தற்போது ஈரான் முன்வந்துள்ளது.

இதன்மூலம், போர் உருவாகும் சூழல் மாறியுள்ளது.

ஈரானில் அரசுக்கு எதிராக போராடி வருபவர்களை கட்டுப்படுத்த அந்நாட்டு அரசு மேற்கொண்ட முயற்சியால் வன்முறை ஏற்பட்டது.

கடந்த 1979-ஆம் ஆண்டுக்கு பின்னர், ஈரானில் உள்நாட்டு புரட்சி உருவாகும் நிலை ஏற்பட்டதால், அமெரிக்கஅதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் இதில் தலையிட்டு, போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தினார்.

தற்போது, ஈரான் – அமெரிக்கா இடையே யுரேனியம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடங்க இருப்பதால், போர் பதற்றம் நீங்கியுள்ளது.

<<<<<<>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக அமெரிக்கா உதவியுடன் நடைபெறும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை இந்த வாரத்தில் தொடங்கும் என்று கிரெம்ளின் மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் நடைபெறுவதாக இருந்த இந்த பேச்சுவார்த்தை கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், வரும் புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் அபுதாபியில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தைக்காக யுக்ரைனில் இருந்து பிரதிநிதிகள் குழு அனுப்பிவைக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு ஜெலன்ஸ்கி உறுதிபடுத்தியுள்ளார்.

நீண்டகால தாக்குதலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், இந்த பேச்சுவார்த்தை அமையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

Cappadocia சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

**இந்தியாவின் சார்பில் Syndrela Das, Divyanshi Bhowmica உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.**

**---------------**

**உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி பயிற்சி ஆட்டத்தில் அமெரிக்க அணி வெற்றிபெற 239 ரன் என்ற இலக்கை இந்தியா ஏ அணி நிர்ணயித்துள்ளது.**

**நவி மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற அமெரிக்கா முதலில் பந்துவீச தீர்மானித்த து.**

**இதனையடுத்து முதலில் பேட் செய்த இந்தியா ஏ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 238 ரன் எடுத்துள்ளது.**

**-------------**

**ஆசிய கோப்பை சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா 16 தங்கம், 15 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களை வென்றது.**

**சென்னையில் நடைபெற்ற இப்போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தை பிடித்தது.**

**--------------**

**ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டி இன்று புதுதில்லியில் தொடங்கியது.**

**--------------**

**பி பி சி-யின் சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் ஹர்மன் பிரீத் கவுர், ஸ்மிருதி மந்தனா**

**மற்றும் திவ்யா தேஷ்முக் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.**

**<<<<<<END>>>>>>**